www.tamilarangam.net



# வீரவன்னிநாட்டின் வேங்கை, தமிழர் மானம் காக்கப் புறப்பட்ட புலிப்படையின் பயிற்றுனர் கிருஷ்ணகுமார் வீர மரணம்

அவகை 24     மறைவு 1-3-1982

தமிழீழத் தொழிலாளர், உழவர்களின் அன்புத்தம்பி, ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலைப் போராளி கழகத்தின் தொடக்ககால உறுப்பினர், புலிப்படைப் பிரிவின் (Tiger Regime) கருவிப் பொறுப்பாளரும், பயிற்றுனராகவும் இருந்து விடுதலை வரலாற்றில் ஓர் மாற்றத்தை ஏற்படுத்திச் சென்றுவிட்ட மறவன் கிருஷ்ணகுமார்.

1—3—82 அதிகாலை 3 மணியளவில் அரசு கூலிப்பட்டாளத்தினரால் சுடப்பட்டு வீரமரணம் அடைந்தான். தமிழீழத்தை ஆண்ட கடைசி அரசன் பண்டாரவன்னியனுக்குப் பின் சுரண்டல் வர்க்க மேலாண்மை அரசின் பட்டாளத்தை நேருக்கு நேர்நின்று எதிர்த்துப் போராடி வீரமரணம் அடைந்த முதல் தமிழன் இவனே. தமிழீழத்தின் நிலத்தையும், எல்லையையும் காக்க அரத்தம் சிந்தும் போராட்டத்தை நடாத்தி வன்னிநகர் வீரர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவன்

தளபதி குமார் தங்கியிருந்த குடிசையை ஆயிரத்துக்கும்மேற்பட்ட கூலிப்பட்டாளம் முற்றுகையிட்டது. வீரமறவன் குடிசையிலிருந்து எட்டிப்பார்த்தான். கண்பட்ட இடமெல்லாம் தானியங்கித் துமுக்கி (துப்பாக்கி)யை ஏந்திய கூலிப்பட்டாளம், இடையிடையே கோட்டைகளைப் பிரித்தெறியும் ஆற்றல் மிக்க கவசவண்டிகள், இத்தனைக்கும் மத்தியில் உடன்பிறப்புகளின் துணையின்றி தனித்து நிற்பதை உணர்ந்தான்.

"கான முயலெய்த அம்பினில், யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது."

என்ற குறளைப் போதித்த மறத்தமிழன் கிருஷ்ணசாமியின் வீரமகன் அல்லவா? வல்லவனுக்கு புல்லுமாயுதம் என எண்ணித் தன் கைத் துமுக்கி (துப்பாக்கி)யுடன் களத்தில் புகுந்தான். எதிரியின் குண்டை மார்பிலே தாங்கிக் கொண்டான். இராவணனும், எல்லாளனும் காட்டிய பாதையிலே வீரமரணமடைந்தான். கழகத்தில் உயர்ந்த பதவியை வகித்ததனால், தான் உயிருடன் பிடிபடுவது தமிழினத்துக்கு இழுக்கு என எண்ணி வீரமரணம் அடைந்தான்.

www.tamilarangam.net

வசதிபடைத்த குடும்பத்திலே வீரத்தாய் வயிற்றில் உதித்த வீரமகன் தன்உயர் கல்விக்காக பாடசாலையில் காலடி எடுத்துவைத்த 77ம். ஆண்டில் இனக் கலவரம் ஏற்படுகின்றது. மலையகத் தமிழர்களும், வன்னிநகர் எல்லைப்புறங்களில் வாழ்ந்த பாட்டாளி மக்களும் மிகக் கொடூரமாக இனவாத சிங்களவர்களினால் தாக்கப்படுகின்றனர். ஏறத்தாழ 50 ஆயிரம் குடும்பங்கள் வீடு இழந்து, பொருள் இழந்து ஆதரவற்றநிலைக்குத் தள்ளப்படுகின்றனர் அரசியல் வாதிகளும் எல்லைக்காவலர்கள் எனத் தமக்குத் தாமே பட்டம் சூட்டிக்கொண்டவர்களும் இந் நிலையை எதிர்த்துப் போராடுவார்கள், அப் போரில் தன்னை இணைத்துக் கொள்ளலாம் என எண்ணமிட்டான். ஏமாந்தான். மாற்று வழி தேடிஅலைந்தான். வீரமுடன் போராடும் புலிப்படை இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டான். இணைந்த நாள்முதல் முழுநேர ஊழியனாகச் செயல்பட்டான். தமிழீழமண்ணில் அவன் காலடிபடாத இடமே கிடையாது. கல் வீட்டிலே கட்டிலிலே வாழ்ந்த வாழ்வைத் துறந்துவிட்டு குடிசையிலே, தரையிலே படுத்துத்திரிந்து எல்லா மக்களையும் சந்தித்தான். அன்புடன் பழகினான், அவனை அந்த மண்ணில் வெறுத்தவர்கள் யாருமில்லை. இந்த நேரத்தில் தான் த. வி. புலிகள் இயக்கத்துக்குள் காழ்ப்புணர்ச்சியினால் தன்னிச்சையாகப் போராளிகளின் மேல் பிரபாகரனால் நடாத்தப்பட்ட கொலைகளைப் பற்றிய செய்தி தெரியவருகின்றது. இந் நடவடிக்கையை இளைஞர்களுடன் சேர்ந்து திறனாய்வு செய்து தவறெனக் கண்டித்தான். இயக்கத்துக்குள் மாற்ற மேற்படுத்த விரும்பினான். இதை ஏற்றுக் கொள்ளாத பிரபாகரனை சர்வாதிகாரி எனக்கண்டித்து முதன் முதலில் இயக்கத்தில் இருந்தும் வெளியேறியவன் இவனே. இதைத் தொடர்ந்து இயக்கத்தில் ஒரு பெரும் மாறுதல் ஏற்படுகின்றது. தனிமனித பயங்கரவாதத்தில் மட்டும் நம்பிக்கையுடைய பிரபாகரனும் அவர் சகாக்கள் ஒரு சிலரும் இயக்கத்தில் இருந்து விலகிச் செல்கின்றனர். இதனால் வெளிநாடுகளில் இயக்க வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முன்னணி உறுப்பினர் தமிழீழம் வந்து தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்ற பெயருடன் இயக்கத்தைப் புனரமைப்புச் செய்கின்றனர். அதன் படைத்துறைப் பிரிவாக த. வி. பு. இயங்கி வருகின்றது. புனரமைப்பின் தொடக்ககால உறுப்பினராகவும், கழகத்தைக் கட்டி எழுப்புவதில் முனைப்பாக முன்னணியிலும் இருந்து செயற்பட்டவர் கிருஷ்ணகுமார். கழகம் நலிந்திருந்த காலம், பொருள் வசதி அற்ற காலத்திலெல்லாம் சளைக்காது கடும் உழைப்பைக் கொடுத்தவர் குமார். பலநாள் பட்டினி கிடந்து, நாளுக்கு 25 கல் தொலைவுக்குமேல் மிதி வண்டியில் சென்று கழகத்தை வலுப்படுத்தியவன், அவனின் உழைப்பால் கழகம் வலுப்பெற்று மக்கள் மத்தியில் வேரூன்றியது.

குமார் கருவிகளைப்பற்றி மிக ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தான். அதன் நுணுக்கங்களை அறிந்து போராளிகளுக்கு வகுப்புக்களை நடாத்தி வந்தான். ஆனைக்கோட்டைக் காவல் நிலையத்தைத் தாக்கிக் கழகத்தின் படை வெற்றி கண்டபொழுதும், கிளிநொச்சியில் சிங்கள அரசு கூலிப் பட்டாளத்தை (ARMY) எதிர்த்துத் தாக்கி சிறீலங்கா படையினரையே (ARMY) குலை நடுங்க வைத்தபொழுதும் தளபதி சுந்தரத்தின் வலது கரமாக இருந்து செயல்பட்டதுடன், இயந்திரத் துமுக்கி (துப்பாக்கி)யை மிகத் திறமையாகக் கையாண்டு கழகப்படையினருக்கு எந்தவித இழப்புமின்றிக் காப்பாற்றியவன் கிருஷ்ணகுமார்.

குறிகட்டுவான் என்னுமிடத்தில் பட்டாளத்தினரை எதிர்த்துப்போரிட்டு அவர்களை வீழ்த்தி தனித்துநின்று வெற்றிகொண்டது மட்டுமின்றி அவர்களிடமிருந்த கருவிகளையும் பறிமுதல் செய்துகொண்டு மீண்டுவந்து சேர்ந்தவன். இப்படிப்பட்ட ஆற்றல்மிகு வீரனை இன்று தமிழினம் இழந்துவிட்டது. இந்நிலை தொடரவிடாது செயற்படுவோம்.

படைத்துறைச் செயலர் (புலிப்படைப் பிரிவு)
தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

---

இத் துண்டறிக்கை தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் புலிப்படைப் பிரிவுச் (Tiger Regime) செயலரினால் அச்சிட்டு வெளிவரப்பெற்றது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்